செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. உ வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

# இந்து சாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு. பிரதி விலை: சதம் 10.

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அ0] யாழ்ப்பாணம்- கீலக ஞூ ஆடி மீ கஅஉ வெள்ளிக்கிழமை (2-8-1968) [இல-கஎ

## கன்மம்

—❦—

[ அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் ]

சைவ சமயிகளென்று தம்மைச் சொல்லிக் கொள்பவர் எவர்களே ஆனாலும் கன்மமுண்டென்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். கன்மமானது உயர்ந்த சாதி, இழிந்த சாதி என்றும்; பூரண ஆயுள், குறைந்த ஆயுள் என்றும், பெரிய போகம், சுருங்கிய போகமென்றும் மூன்று விதமெனவும் முற்பிறவிகளிற் செய்யப்பட்ட புண்ணிய பாவத்திற் கீடாகவே ஆன்மாக்கள் பிறவி எடுக்கின்றன எனவும் ஞான சாத்திரங்கள் கூறுகின்றன. சாதிபேத உண்மையை பரம்பரையாக நிலைநாட்டுவது போலவே நமது சைவசமயப் பிரமாண நூல்களும் வலியுறுத்துகின்றன. உயர்வாகிய வருணங்களிற் பிறப்பதும், தாழ்ந்த சாதிகளிற் பிறப்பதும் ஒவ்வொருவரும் முற பிறவிகளிற் செய்து கொண்ட கன்மங் காரணமாகவேயாம். இப் பிறவியிற் செய்துகொள்ளும் புண்ணிய பாவங்களின் பலனவரும் பிறவிகளில் பொசிப்புக்கு வித்தாகும் என்பதை எவர்களும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

பூமியிலே உயர்ந்த சாதி என்றும், இழிந்த சாதி என்றும் சாதி இரண்டல்லாமல் வேறில்லை; அவ்விரண்டு சாதியாரும் யாவரெனில், நீதி தவறாத நல்வழியில் நின்று கொண்டு, முறைமையோடு முற்பிறவிகளிலே சற்பாத்திரமாயுள்ளவர்களுக்குக் கொடுத்தவர்களே இப் பிறப்பில் உயர்ந்த சாதியிற் பிறப்பார்களென்பதும்; முற் பிறவிகளிலே தருமங்களைச் செய்யாது மகா பாதகங்களைச் செய்தவர்களே இப்பிறப்பில் தாழ்ந்த சாதியாகப் பிறப்பார்களென்பதும் ஞானசாத்திரத்திலுள்ள கிரமமென்றுஒளவைப் பிராட்டியார். இது 'சாதி யிரண்டொழிய வேறில்லை' என்னும் செய்யுளா லுணரப்படும். இச் செய்யுள் சாதி ஆயுள், போகம் என்னும் மூன்றனுள் சாதியைப்பற்றி விளக்க எழுந்த வெண்பாவாதும்.

இனி, போகத்தைப்பற்றி நல்வழியில் ஆராய்வாம். பூமியிலே சற்பாத்திரத்திற் செய்யப்படும் தானத்தினாலே பாவம் நீங்குமென்று உணர்ந்து முற்பிறப்பிலே சற்பாத்திரமா யுள்ளவர்களுக்குத் தானஞ் செய்யாதவருக்கு முற செய்த அப் பாவம் வறுமைக்கு வித்தாயிருக்க இப்பொழுது கடவுளை வெறுத்தால் பெரிய திரவியம் பொருந்த வருமோ? வராது. "செய்தி வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்" என்னும் செய்யுளும் கூறியாங்கு பூர்வ சென்ம கன்மத்திற் கீடாகவே சாதி, ஆயுள், போகம் என்னும் மூன்றும் வரும். என்னும் உண்மையை உணர்ந்து கொள்க.

திருமூல நாயனார் தமது திருமந்திரத்தில் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என உயர்ந்த நான்கு வருணத்தார்களையும், அந்த நான்கு வருணத்தார்களும் ஆன்மார்த்தமாகப் பூசிக்கப்படும் சிவலிங்கம், படிகலிங்கமும், பொன்னாலான லிங்கமும், இரத்தினலிங்கமும், வாணலிங்கமும் என நான்கு வகைப்படும் எனவும் அருளி, பிராமணருக்குரிய தொழில் ஆறு என அருளியதையும், பிறவற்றையும் திருமந்திரத்தை மரபாகப் படித்தவர்களே அறிவார்கள்,

"மறையவ ரர்ச்சனை வண்படி கந்தான்
இறையவ ரர்ச்சனை யெயபொன் னாகும்
குறைவிலா வயிசியர்க் கோமளமாங்
துறையுடை சூத்திரர் தோல்வாண லிங்கமே"

"அந்தணரா வோரறு தொழில் பூண்டுளோர்"

என்பதனாலும் உணர்க.

"குசவன் திரிகையி லேற்றிய மண்ணைக்
குசவன் மனத்துற்ற தெல்லாம் வனைவன்"

எனக் குயவனைச் சொல்லியிருத்தலையும் காண்க.

( தொடர்ச்சி 2-ம் ஆம் பக்கம் )

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

தண்ணார்மதிசூடிதழல்போலுந்
திருமேனி
யெண்ணார்புர மூன்றுமெரி
யுண்ணநகை செய்தாய்
மண்ணார் பெண்ணைத்
தென்பால்வெண்ணெய்
நல்லூரருட்டுறையுள்
அண்ணாவுனக்காளாயினி
யல்லேனெனலாமே.

திருச்சிற்றம்பலம்
- சுந்தரமூர்த்திசுவாமிகள்.

### நாவலர் நல்வாக்கு

நீ உன் உடம்பை வளர்த்தற்குப் பிறிதோன்றன் உடம்பை உண்பையாயின், எவ்வகையால் அருளை ஆளுவை?

---

### திருக்கேதீச்சரம் பாத யாத்திரை

திருக்கேதீச்சரத் திருக்கோவிலில் நிகழும் கதிர்காம சுவாமி தீர்த்தத் திருவிழாவிற் கலந்து கொள்வதற்காக சைவ அடியார்கள் திருக்கூட்டத்தினர் நல்லைக்கந்தன் ஆலயத்திலிருந்து 3-8-68 சனிக்கிழமை மாலை 5-00 மணிக்குப் புறப்படுவார்கள். ஏழாலை திரு. மு ஞானப்பிரகாசம் அவர்களும், ஈழத்துச்சைவ அடியார்கள் பலரும் கலந்துகொள்ளும் இப் பஜனைப் பாதயாத்திரையினர் பூனகரி மார்க்கமாக கேதீச்சரத்தை 8-8-68 வியாழக்கிழமை சேர்வார்கள். இப் பசனைப்பாதயாத்திரை அன்பர்களுக்கு 3-8-68 மாலை 6-00 மணிக்கு நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகத்தினராலும் சைவ அடியார்களாலும் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரியம்பாள் ஆலயத்தில் வரவேற்பளிக்கப் பெற்று வழியனுப்பி வைக்கப்பெறும் யாத்திரைபுரியும் இந்த அடியார்களை ஆங்காங்குள்ள அன்பர்கள், வரவேற்க ஏற்பாடாயுள்ளது.

(நாயன் மார்கட்டு நிருபர்)

---

### திருக்கேதீச்சரம் இராஜ கோபுர மகா கும்பாபிஷேகம்

—०—

19-8-68 வியாழக்கிழமை காலை 6-05 மணிக்கு வரும் சுபவேளையில் நடைபெறும்

நேயர்கள் நெஞ்சம்

### திருக்கோவிலின்
## புனிதத் தன்மையைப் பெருக்குவோமாக

நல்லூர்க் கந்த சுவாமி கோயில் திருவிழா வழமை போல ஆரம்பித்துவிட்டது. வருடந்தோறும் அதிகரித்துக்கொண்டு வருகின்ற அடியார் கூட்டம் நடமாட கோயில் உள் வீதியும் மண்டபங்களும் இடமளிக்கமாட்டாதென்ற கருத்தெழுகின்றது. உள் வீதியில் பல அடியார்கள் அங்கப் பிரதக்ஷிணம் புரிகின்றமை நெருக்கத்தை மேலும் அதிகரித்துவிடும். சுற்றுப் பிரகாரங்களில் பரிவார மூர்த்திகள் பிரதிஷ்டை செய்திருப்பதினாலே உள் வீதி அங்கப் பிரதக்ஷணம் விதிக்கு மாறான செயலாகும். கோயில் தர்மகர்த்தா இதனைத் தடை செய்ய முயலுவாரென எதிர் பார்க்கின்றோம்.

கடைசி எட்டு அல்லது பத்துத் திருவிழாத் தினங்களில் சனக் கூட்டம் வெளி வீதிகளிலும் கட்டுக் கடங்காததாக விருக்கும். வேடிக்கை பார்க்கும் நோக்கமாகச் செல்லும் வாலிபர்களதும் இளம்பெண்களதும், சைவர்களல்லாத புறச் சமயிகளதும் வருகை இக்கூட்ட நெருக்கடிக்கு முக்கிய காரணமாகும். கட்டைப் பாவாடை சட்டை அணிந்து கொள்ளும் இளம் பெண்கள் பார்வை குறைந்த வயதான மூதாட்டிகளுடைய துணையுடன் சமுகமளிப்பார்கள். பெற்றோர் தங்கள் பெண் பிள்ளைகளை மரியாதையான முறையில் தமிழ் மரபின்படி ஆடைகளை அணியச் செய்து ஆலயங்களுக் கனுப்புதல் வேண்டும். தக்க பாதுகாப்புடன் அவர்கள் பெண் பிள்ளைகளை அனுப்புதல் வேண்டும். திருவிழா முடிந்தவுடன் அவர்கள் ஐஸ்கிறீம் கடைகளிலும், காப்புக்கடைகளிலும் பிற கடைகளிலும் காலத்தைப் போக்குதல் கூடாது.

வாலிப சகோதரர்கள் கட்டைக் காற்சட்டையணிந்துகொண்டு ஆலய வெளி வீதிகளில் பொழுது போக்காக உலாவித் திரிதலை நிறுத்துதல் வேண்டும். கோயிலில் அவர்கள் உரிய ஆசார ஒழுக்கத்துடன் வந்து பயபக்தியுடன் கடவுள் வழிபாட்டில் ஈடுபடுதல் வேண்டும். இப்படிச் செய்வதனால் ஏனையோருக்கும் இளைஞர்கள் வழிகாட்டிகளாக விளங்குவார்கள். வழிபாட்டுக்கு வரும் பெரியவர்களுடைய நன்மதிப்பையும் ஆசிர்வாதத்தையும் அவர்கள் பெறுவார்கள். களியாட்ட நோக்கோடு மற்றைய மனிதர்களுடைய நடமாட்டத்தை நோக்காமலும், (அடியார்களையும் வழிபடச் செல்லுபவர்களையும் கேலி வார்த்தைகள் பேசி உள்ளம் புண்படச் செய்யாமல) ஆலயத்தின் தெய்வீக சூழலைப் பெருக்குதல் வேண்டும். இவற்றையெல்லாம் அனைவரும் சிந்தித்து ஆவன செய்ய முன்வரல் வேண்டும்.

வேடிக்கைக்காகச் செல்லும் புறச்சமயத்தவர்கள் கடவுள் வழிபாடு புரியும் தொண்டர்களுக்கு இடைஞ்சல் செய்தல்கூடாது. உற்சவம் கடவுள் வழிபாட்டுக்குரிய நிகழ்ச்சியென்பதை அவர்கள் உணர்தல் வேண்டும்.

வெளிவீதியும் புனிதமான இடம். திருவிழாக்காலங்களில் மக்கள் பாதரட்சையணிந்து கொண்டு அங்கு செல்லுதல் விரும்பத் தக்கசெயலல்ல. பொழுது போக்குக்கு பாதரட்சையுடன் வருகின்றவர்களும் இதனைக் கவனித்தல் வேண்டும். வழிபடும் அடியார்களுக்கு அவர்கள் துணையாக விருப்பார்கள். இவ்வித ஒழுங்கைப் பெரும் கஷ்டத்துடன் அமைதியையும் சமாதானத்தையும் நிலை நாட்டுகின்ற பொலிசு அதிகாரிகளும் கவனிப்பார்களாயின் பெரும நன்மையுண்டு.

இவ்விதமாக ஒவ்வொருவரும் இவ் ஆலயத்தினது தெய்வீகச் சூழலைப் பாதுகாக்கக் கடமைப்பட்டவராவர்.

கந்தர்மடம், டக்ரர். க. கனகரத்தினம்
யாழ்ப்பாணம், 28-7-68.

THE HINDU ORGAN

# இந்து சாதனம்

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

கீலக ௵ ஆடி ௴ கஅ-உ வெள்ளிக்கிழமை [1968]

## கதிர்காமத்திற் றெய்வீகச்சூழல் மாறுகின்றது

கதிர்காமம் முருகக் கடவுளுடைய புனித தலங்களி லொன்றாகும். முருகக் கடவுளுடைய திருநாமங்களுள் 'கார்த்திகேயன்' என்ற திருநாமமு மொன்றாகும். கார்த்திகைப் பெண்கள் வளர்த்தமையினால் அவருக்குக் கார்த்திகேயன் என்ற திருநாமமுண்டாயிற்று. கதிர்காமம் முருகப்பெருமானால் விரும்பப்பட்ட தலம் ஆகையினால் அது கார்த்திகேயன் + கிராமம் என்றாகி பின் அச்சொற்கள் சிதைந்து கஜறகாமம் என்றாகிப் பின் கதரகாமம் என்றாயிற்று. இது சிங்கள மக்கள் கதரகாமம் என்ற பெயரை இட்டதற்கு ஸேர். அருணாசலம் அவர்கள் கொடுக்கும் விளக்கம். தமிழர்கள் அத் தலத்தைக் 'கதிர்காமம்' என்றழைப்பர். அதன் பொருள் திப்பிய ஒளியும் அன்பும் பிரகாசித்துக்கொண்டிருக்கின்ற தலமென்பதாகும்.

முருகப் பெருமானை அடியார்கள் உருவமாகவும் அருவமாகவும் அருவுருவமாகவும் வழிபடுவார்கள். இங்கு மக்கள் முருகப் பெருமானை அருவமாக வழிபடுவார்கள். அந்தணர்கள் குமாரக் கடவுளை கும்பவிம்ப தம்பங்களில் அமைத்து சோடசோபசாரங்களுடன் பூசிப்பர். புத்தி குறைந்தவர்கள் மாமிசத்தைப் பலி கொடுத்து வணங்குவர். வேடர்கள் தாம் வசிக்கும் காடுகளில் கள், மாமிசம் முதலியவற்றை நிவேதனஞ் செய்து வழிபடுவார்கள். ஞானிகள் அவரைக் கருவி கரணங்களுக் கப்பாற்பட்டவரென்றும் சர்வ வியாபகரென்றும், சிருட்டி காரணனென் றிதிகர்த்தா வென்றும் இளங்குமார மூர்த்தியென்றும் தங்கள் இதய தாமரையில் வைத்துப் பூசிப்பர்.

சிங்கள மக்கள், தமிழ் மக்களினுடைய பண்பாட்டையும் வழிபாட்டையும் பின்பற்றி கதிர்காமத் தெய்வத்தின் மேல் பெரும் பகதியுடையவர்களானார்கள். கதிர்மாத் தெய்வத்தையும் கணணகித்தெய்வத்தையும் தாபித்து நெடுங்காலம் வழிபட்டு வருகின்றனர் பண்டைக் காலத்தில் அவர்கள் கண்டிநகரில் நடைபெறும் பெரஹரா என்ற பெருவிழாவில் கதிர்காமத் தெய்வத்துக்கு முக்கிய இடம் கொடுத்து வந்தனர். 18-ஆம் நூற்றாண்டின் பின் கீர்த்தி சிறீ இராஜசிங்கன் என்னுமரசன் சீயத்திலிருந்து அழைக்கப்பட்ட பௌத்த பிக்குகளைப் பிரீதிப்படுத்த புத்தருடைய தந்தத்திற்கு அப் பெரஹரா விழாவில் முக்கியத்துவத்தை அளித்தான்.

இப்பொழுது கதிர்காமத் தெய்வத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதை நிர்வாகிகள் குறைத்து அங்கு புத்தருடைய வணக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க ஏற்பாடு செய்கின்றார்கள். கோயில் உட்பிரகாரத்திலும், வெளிப்பிரகாரத்திலும் பௌத்த சிலைகளை நிறுவிவிட்டார்கள். கதிரைமலையில் தமிழர் பூசித்த வேலாயுதத்தையகற்றி அவ் வேலாயுதம் இருந்த இடத்தில் ஒரு சிறு விகாரையைச் சிங்களக் குருமார்கள் அமைத்து விட்டார்கள். செல்லக் கதிர்காமத்திலும் ஒரு விகாரையை அமைத்து விட்டனர். இவ் விதமான மாற்றங்கள் செய்யப்படுவதினால் கதிர்காமத்தையடைய வழிபடப் போகின்றவர்களுடைய மனத்தில் முருகனுடைய பக்தி குறைகின்றது. அதிருப்தியும் துன்பமும் உண்டாகின்றன. புதிதாக அங்கு செல்கின்றவர்களுக்கு கதிர்காமம் ஒரு முருகக் கடவுளது ஆலயம் என்ற கருத்து ஏற்படக்கூடிய தோற்றம் யாவுமில்லாமல் போய்க் காலகாலகதியில் கதிர்காமத்தில் முருகனுடைய ஆலயமென ஒன்றிருந்ததா வெனப் பிற சந்ததியார் சந்தேகிக்கவும் கூடும்.

மாமிசம், குடி வகைகள் முதலிய விரும்பத்தகாத பொருள்கள் அங்கு விற்பனை செய்கின்றார்கள். கதிர்காமத் தலத்தைப் புனிதமாக்குகின்ற திட்டமும் முருகப்பெருமான் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் தலத்தினது தனிப்பட்ட க்ஷேத்திரத்துக்குப் பங்கம் விளைக்கும்

இவ் விதமான மாற்றங்களைத் தடை செய்து அக் கோயிலினுடைய தெய்வீகச் சூழலைப் பாதுகாக்க அகில இலங்கை இந்து மாமன்றம் போன்ற இந்து சமய சங்கங்கள் முன்வருதல் வேண்டும்.

---

உ
சிவமயம்

## பட்டினத்தடிகள் குருபூசை

நாள்: ஆடி ௴ உஉ உ (6-8-68) செவ்வாய்க்கிழமை

இடம்; யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்

நிகழ்ச்சிகள்:

இரவு 6-30 கடவுளாராதனை, தமிழ்மறை போதல்

விரிவுரைக் கூட்டம்:
"பட்டினத்தடிகள்"
சைவப்பிரசாரகர்
திரு. சி. பொன்னம்பலம் அவர்கள்

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம், 2-8-68.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்,

---

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## கன்மம்

பெரிய பாதகங்களைச் செய்தவர்கள் இழிவான வருணங்களில் பிறப்பார்கள். வித்தியாகுருவுக்கும், தீக்ஷா குருவுக்கும் மனம்நோக அவர்களுக்குத் தீமைகளைச் செய்தவர்கள் நூறு சென்மம் நாயாகவும் பின்பு புலையராகவும் பிறந்து வருந்துவார்கள் என்று திருமந்திரம் செப்புகின்றது.

"மந்திர மோரெழுத் துணர்த்த மாதவர்
சிந்தையி னொந்திடத் தீமைகள் செய்தவர்
நுந்திய சுணங்கனாய்ப் பிறந்து நூறுரு
வந்திடும் புலையராய் மாய்வர் மண்ணிலே"

திருமந்திரத்திலே நான்கு வருணங்களையும் குயவன், புலையன் என்னும் சாதிகளையும் கூறியிருக்கவும் "ஒன்றே குலமும்" என்னும் மந்திரப் பகுதிக்குச் சாதி இல்லையென்று அர்த்தம் பண்ணுதல் மாறுகொளக் கூறலென்னும் குற்றத்தின்பாற்பட்டு அவர் அர்த்தம் அனர்த்தமாய் முடியும். ஒரு நூலுக்குப் பொருள் காணுங்கால் முன்பின் விரோத முறாவண்ணம் பொருள் கொள்வதுதான் பொருத்தம். ஆகையினாலே அத் திருமந்திரப்பகுதிக்கு மெய்ப்பொருள் யாதெனிற் காட்டுதும்.

"ஒருவனே தேவனும்" என்பது சர்வசங்கார காரணரும் அழிவில்லாதவருமாகிய பரமபொருள் சிவபெருமான் ஒருவரே என்பதையும், "ஒன்றே குலமும்" என்பது அப் பரமபொருளாகிய சிவபெருமானுக்குச் சீவர்களெல்லாம் மீளா அடிமைக்குடி என்பதையும் குறிக்கும் என்று கொள்வதே குரு பரம்பரையில் வந்த மெய்ப்பொருளாகும். ஆகவே ஒன்றே குலம் என்ற திருமந்திரப் பகுதிக்குக் குலபேதமில்லை என்று பொருள் கொள்வது பொருத்தமற்றதாகும்.

---

## சைவ சாதனங்கள் திகழவேண்டும்

சைவசமயமே நாம் ஈடேற வழிகாட்டும். அதற்கு நாம் சமயதீட்சை பெற்றுக்கொள்ள வேண்டும். தீட்சையில்லாதவர் செய்யும் எக் கிரியையும், தவமும் விரும்பிய பயனளியா. நாம் விரும்பிய பயனை அடையவேண்டுமானால், விபூதி. உருத்திராக்கம், பஞ்சாட்சரசெபம் என்னும் சைவ சாதனங்களை நாம் போற்றுதல் வேண்டும். திரிகரணசுத்திபெற்று தூய்மையுடைய புலானுணவை நீக்க வேண்டும். தேவார திருவாசகங்களைத் தினம் போற்றவேண்டும் – ஓதவேண்டும். இறைவனிடத்திலன்பு செய்ய வழிகாட்டும் புராணங்களை ஓதல், ஓதுவித்தலும் முத்தியைக் கூட்டும். சரியை, கிரியை, யோகம் செய்து ஞானம் பெறவேண்டும். இறைவனைச் சதாகாலமும் சிந்தித்து வழிபட்டு உய்வோமாக" இவ்வாறு சென்ற 27-7-68 ல் கீரிமலைச் சிறுப்பர் மடத்தில் 'சைவசிகாமணி' பொன் அப்புக்குட்டியவர்கள் கூறினார்கள்

## சம்பூரண இராமாயணம்

நல்லைக் கந்தசுவாமி திருவிழாவில ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நல்லை ஸ்ரீ முருகன் தண்ணீர்ப் பந்தலில் தினமும் 'சம்பூரண இராமாயணம்' என்னும் பொருள்பற்றி அரியதோர் கதாகாலக்ஷேபம் நிகழ்த்தி வருகின்றார்கள். தினமும் இரவு 9-00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறுவரும் இக் கதாகாலக்ஷேபம் தேர்த் திருவிழாவுடன் பூர்த்தியாகும்.

---

## கும்பாபிஷேகம்

கம்பளை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி மஹா கும்பாபிஷேகம் 28-8-68 நடைபெறும்.

## இரதோற்சவம்

காரைநகர் அரசடி கதிர்காமசுவாமி கோவில் இரதோற்சவம் 8-8-68 ல் அன்று நடைபெறும்.

---

நேயர்கள் நெஞ்சம்

## ......... எல்லோரும் இன்புற்றிருக்க!

ஈழத்துச் சைவத் தமிழ்மக்கள் கதிர்காமம் முருகப் பெருமானை வழிபடுதற்காக நாட்டின் நாலா புறத்திருந்தும் ஆண்டுதோறும் விழாக் காலங்களிலும், விசேட வழிபாட்டுக்குரிய தினங்களிலும் சென்று திரும்புவது வழக்கம். இதைவிட தங்களது நேர்த்திக் கடனை நிறைவு செய்தற்காக செல்லும் அடியார்களின் எண்ணிக்கையை அளவிட முடியாது! இவ் விதமாகப் பக்தி சிரத்தையுடன் கதிர்காமத்தையடைய வழிபடச் செல்லும் தமிழ் சைவ அன்பர்கள், கடந்த சில ஆண்டுகளாக ஆங்கு திட்டமிட்டு நடைபெற்று வருகின்ற மாற்றங்களையும் ஒழுங்குகளையும் அவதானித்துப் பெரும வேதனையுடன் பலவிதமான அபிப்பிராயங்களையும் கூறிவரக் கேட்டிருக்கின்றோம். கதிர்காமத் திருத்தலம் கடந்த 30, 40 ஆண்டுகளுக்கு முன்பு ஈழத்துச் சைவ, தமிழ் மக்களதும் பௌத்த சகோதரர்களதும் ஏனைய மக்களதும் வழிபாட்டிடமாகவும் இன, மத பேதமற்ற இன்பச் சூழ்நிலையுள்ள சுதந்திர பூமியாகவும் விளங்கி வந்திருக்கின்றதே! அந்தக் காலத்துக்கும் இக் காலத்துக்கு மிடையில் இவ்வளவு மாற்றம் வந்து விட்டதே....! புனித நகராக்கும் அரசாங்கத் திட்டத்தை ஈழத்துச் சைவத் தமிழ்மக்களும் சபைகள் மன்றங்களும் அந்நேரம் ஏகோபித்து எதிர்த்தமை நியாயமெனத் தோற்றுகின்றதே! கதிர்காமத்தில் இன ஒற்றுமை வளர கதிர்காமத்தையனை வேண்டுதல் செய்வோம். மத சுதந்திரம், வழிபாட்டுச் சுதந்திரம் கருத்து வெளியிடும் சுதந்திரம் வளர்ந்து வரவும், எல்லோருக்கும் நீதி வழங்கும் ஆட்சி மலரவும் சமூக உறவுகள் பலப்பட்டு கட்டுப்பாட்டுடன் பஞ்ச சீலக் கொள்கைகள் கடைப் பிடிக்கப்பட்டு வரவும் கதிர்காமத்தையனை வேண்டுதல் செய்வோம்! 'ஏட்டுச்சுரைக்காய்கறிக்குதவாது' உண்மையான பஞ்ச சீலக் கொள்கை பேச்சளவில் வைத்துக்கொள்ளாமல் செயலிற் றிகழ வழி பிறக்கவேண்டும்! இத்தகைய இன்ப சூழ்நிலைகளை வளர்த்து வருவோமாக. விஷமிகளின் சூழ்ச்சிகள் ஒழிந்து அன்பு நிலை பரவ, தலைவர்களும், அறிஞர்களும், அன்பர்களும் எல்லோரும் ஒன்றுபட்டுழைக்க கதிர்காமத்தையன் நல்வழி காட்டுவாரக. எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாது வேறொன்றறியேன் பராபரமே" கருணை வளர்க! வாழ்க சீரடியரெல்லாம்!

கா. இரகுநாதன்
யாழ். காலமாகட்டு, 1-8-68.

# அன்னை அபிராமியின் அருள்பெருகு திருவளம்

[ ஆசிரியர் பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா ]

(முன் வளர்ச்சி — 7)

35. சிறடி சென்னி வைக்க எங்கட்கு
ஒரு தவம் எய்தியவா

பிரமாவை நிலைக்களமாக்கி நின்று படைக்கும் சிவசக்தி பிராம்மி எனப்படுபவர். உருத்திர மூர்த்தியிடமாக நின்று ஒடுக்கும் சிவசக்தி இரௌத்திரி எனப்படுவர். அவ்வாறே விஷ்ணுவை அதிட்டித்து நின்று காத்தருளும் சிவசக்தி வைஷ்ணவி எனப்படுவர். இயக்கம் எல்லாவற்றிற்கும் மூலமாயுள்ளவர் சிவசக்தியேயாம். எனவே திருப்பாற் கடலில் பாம்பாகிய அணைமீது அறிதுயிலமரும், செம்பொருளாகிய வைஷ்ணவி எனப்படும் அபிராமி தேவீ! பிறைச்சந்திரனைத் திருமுடியிற் சூடிய சிவபிரானுடன் ஊடல் திருவிளையாட்டில் தேவரீரது திருவடி சந்திர மணங் கமழும்படி சூட்டப்பட்டதன்றோ! அத்துணைச் சிறப்பு வாய்ந்த திருவடிகளை சகலர் வரிசையிலுள்ள மனிதனாகிய தமியேனும் சிரசிலே சூட்டி வணங்கும் பேறு பெற்றேனென்றால் இத் தவப் பேறு தேவருக்கும் கிடைக்குமோ?

36. அம்பிகையே உன்னருள் ஏதென்று அறிகிலேன்

அபிராமி தேவியே! இரத்தினம் பொன் வெள்ளி நெல் முதலிய ஐசுவரியப் பொருளாகவும் இருக்கின்றீர், அப்பொருள்களால் அநுபவித்து முடிக்கும் இன்ப துன்பப் போகமாகவும் இருக்கின்றீர். அருமையாகிய அப்போகந் தரும் மயக்கமாகவும் இருக்கின்றீர், அம் மயக்கத்தில் வெறுப்பு நீங்குதலால் வரும் ஞானமாகவும் இருக்கின்றீர். வெண் தாமரை செந்தாமரை என்பவற்றில் வீற்றிருக்கும் அம்பிகையாகவும் விளங்குகின்றீர், தமியேனது மனத்தின் கண்ணுள்ள மாயாகதகாரம் ஒரு சிறிதும் இல்லையாகவே அறிவுருவாகிய பரவெளியாகவும் விளங்குகின்றீர், அதனால் தேவரீருடைய திருவருளின் இயல்பைத் தமியேன் அறிகின்றிலேன். தெருட்டி யருளுக.

(வளரும்)

## சைவப்புலவர் பரீட்சைகள்

சைவ பரிபாலன சபை நடாத்தும் சைவப் புலவர் இளஞ் சைவப் புலவர் பரீட்சைகள் 29-8-68, 30-8-68 ஆகிய இருநாட்களிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம்
க. கணபதிப்பிள்ளை, பரீட்சைக் காரியதரிசி.

## கனிஷ்ட பாடசாலைத் தராதர பத்திர பரீட்சை
### கார்த்திகை — 1968

வடமாகாண ஆசிரிய சங்கத்தினால் நடாத்தப்படும் இப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பாடசாலை மாணவர்களிடமிருந்து 15-9-68 க்கு முன்பாகவும், தனிப்பட்ட பரீட்சாத்திகளிடமிருந்து 31-8-68 க்கு முன்பாகவும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரங்களைக் கீழ்க் காணும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

1968 — 1969 பரீட்சைக்குழு உத்தியோகத்தர்கள் பின் வருமாறு: தலைவர் திரு. ஏ ஆர் இராசநாயகம், கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில். காரியதரிசி திரு. த. சேனாதிராசா, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம். உப காரியதரிசி திரு. சி. பரமானந்தம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம்.

பரீட்சை சம்பந்தமான கடிதங்கள் யாவும் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

217/4, கடைச்சாமி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம். 28-7-68.
த. சேனாதிராசா, கௌரவ காரியதரிசி.
132, 2-8-68.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காரைநகர் கிழக்கு காரைநகர் பொன்னையா நமசிவாயமும், பெண் இராசம்மாவும். —வழக்காளிகள்

இல. M B 7352 எதிராக

யாழ்ப்பாணம் திருநெல்வேலி தம்பிப்பிள்ளை இராசரத்தினமும், பெண் கனகமணியும். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7352-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1968-ம் ஆண்டு புரட்டாதி மீ 16உ திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 1440/-ம் 8-4-65 தொடக்கம் 17-11-65 வரைக்கும் ரூபாய் 800/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 536-10 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர் கோயிற்பற்று கொக்குவில் கிறை கொக்குவில் கிழக்கு "கரியபுலம்" பரவில இலா 1 ம வீடும் செய்பயிர்களும். எல்லை கிழக்கு றோட்டு வடக்கு கணபதிப்பிள்ளை தம்புவுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம், தெற்கு ஆதனம், மேற்கு தையைா நல்லையாவுக்குரிய ஆதனம். இது காணி இராமுப்பிள்ளை பெண் அன்னலச்சுமிக்குரிய ஆதனம். இது காணி சுந்தோரில் D 286/290 ம் இல. பதிவு செய்யப்பட்டுள்ளது.

16, A அம்மன் றோட்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்
அ. ஜெகநாதன்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
M. 129, 2—8—68

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல M B. 8080

கோண்டாவில்

1. செல்லையா கனகரெத்தினமும் பெண் 2. நாகேஸ்வரியும் —வழக்காளிகள்

எதிராக

உரும்பிராய்

1. சின்னப்பு கதிர்காமு கைம்பெண் தங்கம்
2. கதிர்காமு அப்பாத்துரை
3. கதிர்காமு தர்மலிங்கம் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 8080-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1968 - ஆம் ஆண்டு புரட்டாதி மீ 16 உ (16-9-68) திங்கட்கிழமை பிற்பகல் 4-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1758-ம் 24-3-66 தொடக்கம் 13-12-67 வரைக்கும் ரூபா 1000-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 73-12 இதில் ரூபா 100 கட்டப்பட்டிருக்கிறது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோயிற்பற்று கோப்பாய் வடக்கு இறை 'மல்லிகை புலம்' பர நில இலா 18 ம் அதைச்சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு கதிர்காமு இராமுவுக்கும் மற்றும் பேருக்கும் உரிய ஆதனம். வடக்கு வீரகத்தி வயிரமுத்துவின் ஆதனம் மேற்கு வீரகத்தி வைரமுத்துவுக்கும் செல்லப்பிள்ளை குட்டித்தம்பியின் உரிமைக்காறரின் ஆதனமும் தெற்கு அம்பலவாணர் சின்னையாவின் உரிமைக்காறரின் ஆதனம்.

அ. ஜெகநாதன்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner, Valuer,
16 A, அம்மன் றோட்
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
எம் 130 2-8

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இலக்கம் M B 9083

குருநாதர் சின்னையா தெல்லிப்பளை கிழக்கு —வழக்காளி

எதிராக

1. அம்பலவாணர் காசிப்பிள்ளையும் பெண்
2. செல்வநாயகி

பளை வீமன்காமம் தெல்லிப்பளை —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9083-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1968-ம் ஆண்டு (29-8-68) ஓகஸ்ட் மாதம் 29-ந் உ வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 6066-ம் 17-5 67 தொடக்கம் 17-12-67 வரைக்கும் ரூபாய் 4000 க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 539-15 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை கோயிற்பற்று பளை "குடந்தறை" பரப்பு நில ஸாசம் 8-ம் இனைற்றில் பங்குமரங்களும் நிற்கும் 3 தென்னை மரங்களும். இதற்கு எல்லை கிழக்கு வயிரமுத்து சின்னத்தம்பியின் ஆதனம் வடக்கு அப்புப் பிள்ளை பெண் அன்னப்பிள்ளை மற்றும் பெருக்கும் சபாபதிப்பிள்ளை செல்லப்பாவுக்கும் உரிய ஆதனங்கள். மேற்கு ஒழுங்கை. தெற்கு அம்பலவாணர் தம்பிப்பிள்ளைக்குரிய ஆதனம். இது அடங்கலும்.

சி. செ மாரிமுத்து
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
"விதானை வளவு"
சிதம்பரன் ஒழுங்கை, 20-6-68
(M, 125 —2-8-68)

## யாழ்ப்பாணம் சுப்ரீம்கோட் நீதியரசர்

9-8-68 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் யாழ்ப்பாணம் உயர்நீதிமன்றத்திற்கு நீதியரசர் கௌரவ உயர்திரு. வி. சிவசுப்பிரமணியம் அவர்கள் நீதியரசராக தலைமை தாங்குகின்றார்கள். நீதியரசர் தமது குலதெய்வமாகிய கலட்டி எச்சாட்டி ஸ்ரீ முத்துமாரிஅம்மன் ஆலயத்தில் அன்று காலை 9-30 மணிக்கு வழிபாடு ஆற்றுவார்கள். அதற்காக வேண்டிய ஒழுங்குகளை முகாந்திரம் இ. பொ. இராசையா அவர்களைத் தலைவராகக் கொண்ட பஞ்சாய சபையினர் கவனித்து வருகின்றனர்.

யாழ்ப்பாணம்

## — ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணக்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 24 மாசம் 36 மாசம் என்னும் காலங்களை வரையறுக்க ஏற்படும்வட்டியும் முறையே 7 விகிதமும் 8 விகிதமும் 9 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகளை ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை எங்கள் காரியாலயமூலம் அறிந்துகொள்ளலாம்.

— மனேஜர்.

## சிறந்த சேவையாளர் திரு. சிவக்கொழுந்து

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நாற்பது வருட காலமாக லிகிதராசக் கடமையாற்றிய திரு க. சிவக்கொழுந்து அவர்கள் 29-7-68 சிவபதமடைந்தனர். அவருடைய நேர்மையும் இன்சொல்லும் கடமையிலூக்கமும் அடக்கமும் ஒழுக்கமும் யாவரையும் கவர்ந்தன. அவர் கடமை புரிந்த காலத்திலே கல்லூரிப் பிரதமாசிரியர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் அவருடைய சேவையைப் பாராட்டினர்கள். கூர்மையான விவேகமுடையவர் எவருடனும் பயனில்லாத சொற்களைப் பேசமாட்டார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர்களும் அவருடைய ஈமச்சடங்குகளுக்குச் சமுகமளித்தனர். அவருடைய ஞாபகமாக கல்லூரி அன்று விடுமுறை விடப்பட்டது.

## நாவலர் வழியைப் பின்பற்றும்வாமாக

சாந்தையர்மடம் — ஸ்ரீ கற்பக விநாயகர்கோவிலில் விசேடப்பொதுக் கூட்டம் 30-7-68 செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் திரு ஆ. சண்முகராசா தலைமையில் நடைபெற்றது.

ஆவணிமாதத்தில் நடைபெற இருக்கும் வருடாந்த உற்சவத்தை வெகு சிறப்பாக நடாத்துவதெனவும், சமய உபந்நியாசங்கள் பக்திப் பாடல்கள் என்பன நடைபெற வழக்கம்போல் ஒழுங்கு செய்வதெனவும் முடிவுசெய்யப்பட்டது. ஆலயத்திற்கு வேண்டிய திருப்பணிகளைச் செய்து முடிக்க திருப்பணிச் சபை ஒன்றும் நிறுவப்பட்டது.

ஆலயம் புனிதமாக இருக்க வேண்டும். அடியார்களின் வழிபாட்டிற்கும் சமய அறிவுக்கும் வழிகாட்டியாக ஆலயம் அமைய வேண்டும். ஆடம்பரமான செலவுகளைக் குறைத்துச் சமய அறிவின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு ஆலய நிர்வாகங்கள் அமைக்கப்படவேண்டும் ஆலய வழிபாட்டிற்குவரும் அடியார்கள் வழிபாட்டின் முறையை நன்கு தெரிந்து, சமய அறிவை வளர்க்கவேண்டும். சமய அறிவின் அவசியத்தை உணர்ச்சி செய்ய ஆலயங்கள் முன்வர வேண்டும். இதுவே நாவலர் பெருமானின் முக்கிய குறிக்கோளாகும். அதனாலன்றோ அன்று வண்ணார் பண்ணைச் சிவன் கோவிலில் வெள்ளிக்கிழமைதோறும் சமய உபந்நியாசத்தை மேற்கொண்டனர். அன்னாரின் வழியைப் பின்பற்றுவோமாக என சைவப் புலவர் திரு. வ. கந்தசாமி ஆசிரியர் குறிப்பிட்டனர். சிவநெறிக் காவலர் திரு. த. முத்துச்சாமிப் பிள்ளை அவர்களின் மரணத்துக்கு அநுதாபம் தெரிவிக்கப்பட்டது.

## மகோற்சவம்

ஸ்ரீ முன்னேஸ்வர நாதஸ்வாமியின் வருடாந்த உற்சவம் இம்மாதம் 26 ம் திகதி (10-8-68) சனிக்கிழமை துவஜாரோஹணத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து ஆவணி மாதம் 21 ம் திகதி (5-9-68) வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும், 22 ம் திகதி (6-9-68) தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

## கழுத்துறை கதிர்வேலாயுத சுவாமிகோவில் சங்காபிடேகம்

தென்னிலங்காபுரியில் களுகங்கையின் வளம் பெருகும் களுத்துறை 'வேலர் புரம்' எனனும் தலத்திற் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் கதிர்வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த விழாவும சங்காபிஷேகமும் அன்னதான வைபவமும் எதிர் வரும் 8-9-68 ல் நடைபெறவிருக்கின்றது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோடு

ஆறுமுகம் தம்பிப்பிள்ளை, விமன்காமம் —வழக்காளி

இல. M. B. 8808 எதிராக

1. சின்னத்தம்பி சின்னத்துரை
2, பெண் பூமணி, சுதுமலை —எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக்கோட்டின் M. B. 8808 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழே நன்கு விபரிக்கப்படும் ஆதனம் 1968-ஆம் ஆ புரட்டாதி மாசம் 5-ந் திகதி (5-9-68) வியாழக்கிழமை காலை 9-30 மணி தொடக்கம் அக் காணிகுள் கின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதலும் வட்டியுமாக 5,810/- ரூபா இன்னும் 3500/- ரூபாவிற்கு 3-2-67 — 28-10-67 வரைக்கும் நூற்றிற்கு 8 வீத வட்டியுங் கூட்டிக் கூடிய தொகைக்கு 28-10-67 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும் வரைக்கும் ஐந்துவீதவட்டியும் செலவு ரூபா 473-15 சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோவிற்பற்று உடுவிலிறை "வெலந்தனே" பர. கில லா 10½, வடமேற்கே இருக்கும் கிணற்றில் பங்கும் வழி வாய்க்கால் பாவிப்புரித்தும், இதில் மேற்குப்புறமாக பர. கில. லா. 7 எல்லை கிழக்கு சரவணமுத்து சின்னத்துரையினுதனம், வடக்கு வாய்க்கால், மேற்கு இரத்தினம்பெண் இராசம்மாவினுதனமும் வாய்க்காலும், தெற்கு வாரிக்குட்டி பெண் பொன்னுவினுதனமும் மற இது முழுவதும், பதிவு இல, A 318/121.

தா. க. பொன்னுத்துரை J. P.

"அகிலகம்" கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்
28/1, யாழ்வீதி, யாழ்ப்பாணம். M 126 2-8-68

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 7583. D. C. J.

காசமணி வயிரவநாதர், கொக்குவில். யாழ்ப்பாணம். —வழக்காளி

எதிராக

சோமசுந்தரம் கைம்பெண் இரத்தினேஸ்வரி 118 பலாலி றோட்டு, திருநெல்வேலி —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 7583 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1968-ம் ஆண்டு ஆவணி மீ 17-ம திகதி சனிக்கிழமை பகல் பத்துமணி தொடக்கம் அந்தக் காணிக்குள் கின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 892/-ம் 29-7-65 தொடக்கம் 29-1-66 வரைக்கும் ரூபாய் 600/- க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 182-60 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் தென்மராட்சிப் பகுதி கைதடி கோவிற்பற்று நாவற்குளி இறை கொச்சியடி வயலும் வளவும் கிலப்பரப்பு 24 வான்பயிர்களும். எல்லை கிழக்கு கதிரவேலு சின்னையாவும் மறுபெயரும், வடக்கு கார்த்திகேசு நரசிங்கமும் மறுபெயரும். மேற்கு ஐயாத்துரை பெண் இராசம்மாவுக்கும் மறைதடி வீரகத்திப்பிள்ளையார் கோவிலுக்குமுடைய ஆதனமும், தெற்கு கணபதிப்பிள்ளை அருணசலத்தினுதனம் இதற்(கு)ச்சாரியலாய் அரைவாசியும் அதைச் சேர்ந்தவைகளும். P 386/213,

இந்திரபவனம், மா. முருகேசு J. P,
புங்குடுதீவு. கொமிஷனரும விலைமதிப்பாளரும்,
16-6-68 எம். 128, 2-8-68)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதியன்றத்திலே

புங்குடுதீவுமேற்கு பெரியதம்பி அருளம்பலம் —வாதி

இல. எம் பி 8417 எதிராக

புங்குடுதீவு மேற்கு

1. வேயன்னு சிற்றம்பலம் அம்பிகைபாகனும் பெண்
2. பராசக்தியும், —பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் எம் பி 8417 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்துள்ள கோட்டுக் கட்டளையின்படி இதன்பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுகாணி 1968 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 3 திகதி செவ்வாய்க்கிழமை (3-9-1968) முற்பகல் 10 மணி தொடக்கம் அக்காணிக்குள் கின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 935/- க்கும் மேலும் ரூபா. 2000/- க்கு 27-8-66 தொடக்கம் 11-4-67 வரை 12 வீத வட்டியும். 11-4-67 தொடக்கம் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா. 248-11 சதம்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி, புங்குடுதீவுக் கோயிற்பற்று புங்குடுதீவு மேற்குஇறை "தெற்கறத்தை" கிலப்பரப்புப் பதினைந்தும் (கில பர 15) செய்பயிர் வான்பயிர்களும் வீடுகளும் கிணறும். இதற்கெல்லை கிழக்கு சின்னத்தம்பி சுப்பிரமணியத்தினதும் பெண் பொன்னம்மாவுக்குமுரிய ஆதனம், வடக்கு கனகரத்தினம் பெண் கேசமலரின் ஆதனம, மேற்கு கதிரேசபிள்ளை பெண் கனகேஸ்வரியினுதனம், தெற்கு ஒழுங்கை இடங்களும்.

S. இரத்தினசபாபதி, J. P.

ஸ்ரேசன் றோட், கொம்மிஷனரும, விலைமதிப்பாளரும்
கோண்டாவில், 23-7-68. (எம. 127 3-8-68).

மலரயனுந் திருமாலுங் காணுமை மதிமயங்கப்
புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டுதொழப் புரிசடையார்
குலவுநடந் தருந்தில்லைக் குடதிசைக கோபுரவாயில்
நிலவிய கற்பகக்கன்றி னிறைமலர்த்தா ளிணைபோற்றி.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 2—8—1968 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்.

## பழைமையைவளர்க்க ஆட்கள் தேவை?



பத்தர்: "தாவணி அணிந்து 'தமிழ் மரபு விளங்க (இனி) தாங்கள் கோயிலுக்குப்போகப்போவதாக இளம்சகோதரிகளும், கட்டைக் காற்சட்டையோடு வழிபாட்டிடங்களிற் சுற்றித் திரியாது 'வேட்டி சால்வையுடன்' அமைதியாக, அசல்சைவர்களாக — ஆலயச் சூழலின் புனிதத்தை யுணர்ந்து அவ்வழியே வழிபாட்டில் நிற்போமென வாலிபசகோதரங்களும் போட்டி போட்டுக்கொண்டு நிற்கதுகளாம்! 'சமயக்கல்வி சமயக்கல்வி' என்று குரலெழுப்பியது பயன் தராமற்போகுமா...?

சித்தர்: நல்லதுதானே! 'கட்டைப் பாவாடை'யணிந்து கொண்டு ... சகோதரிகள் உலாவுவதை அனேகமாக தாய் தந்தையரென்ன — இளம் வாலிபர்களென்ன, அனைவருமே வெறுக்கிறார்கள; தமிழ்ப் பண்பு (நடையில், உடையில், செயலில்) துலங்கவேண்டுமென அவாவுறுகின்றார்கள்—அதுவும், திருக்கோவில் வழிபாடெனிற் சொல்லவேண்டுமா? காலத்தின் குறிப்பறிந்து நடக்கும் குணமுள்ளபிள்ளைகள் சொல்லாமலே இத்தகைய முன்மாதிரிகளைக் கைக்கொண்டுவருவது வரவேற்கத்தக்கதுதான்! இது (நல்லூர்) கோயிலில்மட்டுமல்ல, பாடசாலையென்ன? எங்கும்வேண்டும்! பழமைபேசும் நம்தலைவர்கள், மங்கையர்கள், வாலிபர்கள் சங்கங்கள் என்பவை தொண்டாற்றக்கூடாதா......? இது பணியில்லையோ ...?

"நாயன்மார் - நாதன்"

## பிரிவிடுதல் நோத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திரிக் கோட்டில்

வழக்கு இல. 9911

1. இமையாணன் வெய்தங்க மாப்பாணர் மறுநாமம் தம்பு சிவப்பிரகாசம் மறுநாமம் இராசா 2. பெண் தெய்வானைப்பிள்ளை —வழக்காளிகள்

எதிராக

1. புத்தூர் முத்துக்குமாரு சண்முகசுந்தரம் 2. தற்காலம் மலேசியா குகதாசன் மறுநாமம் ஐயாத்துரை செல்வரத்தினம் அவரின் அற்றோணி கரணவாய் வடக்கு சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை 3. இமையாணன் தற்காலம் வசலன்லேன் வெள்ளவத்தை கணபதிப்பிள்ளை சிவகுருநாதர் திருநாவுக்கரசு 4, இமையாணன் நல்லநாதன் லோகநாதன் 5, நல்லநாதன் சற்குணநாதன் 6, நல்லநாதன் மகள் நேத்திராணி 7. நல்லநாதன் கோகுலநாதன் 8, நல்லநாதன் பஞ்சநாதன் 4—8 எதிரிகள் பராயமற்றவர்களாயிருப்பதால் அவர்களின் பராபரிப்புத் தத்துவகாரன் இமையாணன் இராசா நல்லநாதன் 9, கரணவாய் வடக்கு தற்காலம் கொழும்பு கந்தரம் மறுநாமம் சிவசுப்பிரமணியம் சண்முகநாதன் 10, கரணவாய் வடக்கு ஆறுமுகம் கணபதிப்பிள்ளை 11. பெண் பவளம் 12 நாவற்காடு வரணி சட்டநாதர் குலநாயகம் 13. பெண் பரமேஸ்வரி 14. சிற்சிங்கர் சேனாதிராசா இலங்கை நாதன் 15, பெண் தில்லைநாயகம்

எதிரிகட்கு பொலிகண்டிக் குறிச்சி இறை பெரும் பற்று கி பர 15 என்னும் ஆதனம் என்னும் ஆதனங்களை 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தின் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமககறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1968-ம் வருடம் புரட்டாதி மீ 2-ஆம் திகதி காலை 10-00 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளைபண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி
செ. யோ. நவரட்டினம்
சக்கிடுத்தார்
1968-ம் வருடம் ஆடி மீ 10உ
எம் 84 (21-6-68)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

சண்டிக்குளி யோசெப் செல்லப்பா தனபாலசிங்கம் வழக்காளி

எதிராக

உடுவில் போல் கிறிஸ்மஸ் பிலிப்பையா ஞானதுரை (எட்வேட் செல்லையா சின்னத்துரையின் காலஞ்சென்ற கைம்பெண் மேரி கனகமணியின் தோட்டத்து தத்துவ பிரதிநிதியாக) —எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 8812-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1968 ம் ஆ ஆவணி மாதம் 21 ம் திகதி (21-8-68) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் கின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்

தீர்வைத் தொகை:— முதல்வட்டி ரூபா 4135 - இன்னும் ரூபா 3000 த்துக்கு 5-2-67 தொடக்கம் 15-7-67 வரைக்கும் 6 வீத வட்டியும் அதன் மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 320-79

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு உடுவில் கோயிற்பற்று உடுவிலிறை "பற்றைப்பை தெற்கும் மறுபிரிவுகளும்" பர. நில இலா. 9, 3/8. இதடங்கவில் பிரிவிடப்பட்ட கிழக்குப் பக்கமாக பர. நில இலா 4, 9/16. இல் மேற்குப் பக்கமாகப் பிறிவிடப்பட்ட பர நில இலா 3. 0 குளி. இதற்கெல்லை கிழக்கு மிகுதிக் காணியும் ஒழுங்கை முகப்பும். வடக்கு டேவிட் சாமுவேல் ஸ்டீவன்ஸிரிறுரிமையாளரினுதனம். மேற்கு தனம் ஜொராடின் பெண் ஜெப்சியினுதனம். தெற்கு பென்னிசிங்கத்தின் பெண் சுந்தரத்தினுதனம்.

செ. விசாகரத்தினம்

133, பருத்தித்துறை றோட்டு, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
நல்லூர், யாழ்ப்பாணம், 25-7-68. M 131 2-8-68

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இல. M B 7907

வறுத்தலைவிளான் 1 செல்லப்பா கிருஸ்ணரும் மனைவி
2 சந்திரவதியும் —வழக்காளிகள்

எதிராக

இணுவில், இணுவில் கிழக்கு 1 பொன்னு ஆறுமுகமும் மனைவி
2 தங்கமமாவும். —எதிராளிகள்

M B 7907 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த உத்தரவின்படி கீழ்காணும் ஆதனங்கள் 1968-ம் ஞு செப்ரெம்பர் (புரட்டாதி) மீ 24உ (24-9-68) செவ்வாய்க்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தக்க் காணிக்குள் கின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல்வட்டி ரூபா. 7883-33 சதமும் மேலும் 6000/-ம் ரூபாவுக்கு 24-12-65 தொடக்கம் 25-5-67 வரைக்கும் வருடமொன்றுக்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரைக்கும் வருடமொன்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 551-45 சதமும்.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோயிற்பற்று இணுவில் இறை 'கொககன்' கிலப்பரப்பு 14, கிழக்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும் இதற்கு எல்லை கிழக்கு தம்பாப்பிள்ளை செல்லையாவுக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம், வடக்கு சின்னத்தம்பி கந்தையாவுக்கும் கார்த்திகேசு நாகமாவுக்குமுரிய ஆதனங்கள. மேற்கு ஆறுமுகம் செல்லருக்கும் சங்கரப்பிள்ளை மனைவி வயிரவிப்பிள்ளையின் உரிமைக்காரர்களுக்குமுரிய ஆதனங்கள். தெற்கு சங்கரப்பிள்ளை மனைவி வைரவிப்பிள்ளையின் உரிமைக்காரர்களுக்கும் வேதவனம் கதிர்காமருக்குமுரிய ஆதனங்கள். இது முழுவதிலும் சொரியலாய் கிலப்பரப்பு 5 குளிகள் 15 அதைச் சேர்ந்தவைகளும்.

2. ஷை இணுவில் இறை 'நெல்லாககம் பனை...' குளிகள் 6½ இதற்கு எல்லை கிழக்கு செல்லையா இராசதுரையினுதனம். வடக்கு பொன்னு ஆறுமுகத்துக்கும் மனைவி தங்கம்மாவுக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம். மேற்கு அம்பலவாணர் ஆறுப்பிள்ளையினுதனம், தெற்கு ஒழுங்கை. இது முழுவதும் உள்ளே வெளியே போகும் ஒழுங்கையாகப் பாவிக்க உரிமையிருக்கிறது.

வி. செ. குட்டிப்பிள்ளை,

"இராசகிரி" கொம்மிஷனர்
643, காங்கேசன் துறைவீதி, Auctioneer and Valuer.
யாழ்ப்பாணம், 29-7-68 எம் 134 2—8—68


## இந்துசாதனம்

திருத்திய வருடசந்தாவிகிதம்

உள்நாடு

| | |
|---|---|
| ஆங்கிலம் | 9-00 |
| தமிழ் | 9-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 12-00 |

வெளிநாடு

| | |
|---|---|
| ஆங்கிலம் | 10-50 |
| தமிழ் | 10-50 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-50 |


### நாவலர் நல்வாக்கு

பிறர் பொருளானது, உடல் உயிர் இரண்டிற்கும் ஊறு செய்தலால், உடல் ஒன்றிற்கே ஊறு செய்யும் விஷத்திலும் கொடியதாம்.

X X X

தரித்திரனுய் இருக்கும் போது திருத்தி அடையாதவன், செல்வனுய போதும், திருத்தியடையான்; திருத்தியடையாமை மனக் குற்றமே அன்றிப் பொருட் குற்றம் அன்று.